*கவனிக்க.-2022.07.15 ஆந் திகதிய 2289 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* I: II *(அ) மற்றும் பகுதி* IV *(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2290 - 2022 ජූලි මස 22 වැනි සිකුරාදා - 2022.07.22

*2290 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1062 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1064 |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, ஒகத்து மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, யூலை மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# அரசாங்க அறிவித்தல்கள்

## 2022 இற்கான சிறுபோக கூட்ட தீர்மானங்களை அறிவித்தல் - மஹஎலிய திட்டம்

நாட்டில் பரவிக் கொண்டு செல்லும் கொவிட் - 19 (Covid-19) வைரஸ் தொற்று பரவல் மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு என்பவற்றை கவனத்திற் கொண்டு இம்முறை 2022, சிறுபோக கூட்டம் நடைபெறாததனால் முன்பு நடந்த கூட்டத்தின் தீர்மானம் 2022, சிறுபோக கூட்டத்தின் தீர்மானமாக கொண்டு போகத்தை ஆரம்பிக்க தீர்மானம் எடுக்கப்பட்டது:-

1. நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் உரிய விவசாய அமைப்பின் மூலம் பராமரிப்பு வேலை முடிக்கும் திகதி - 2022.07.02
2. முன்பு பயிர்செய்யப்பட்ட போகத்தின் ஒழுங்கு படி பயிர் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட நிலத்தின் அளவு - 540 ஏக்கர்
3. தீர்மானிக்கப்பட்ட பயிர், பயிர் வகை - உருளைக்கிழங்கு மற்றும் கலப்பு மரக்கறி
4. ஆரம்ப நீர் விநியோகித்தல் திகதி - 2022.07.04
5. நிலம் தயார்படுத்தி முடிக்கும் இறுதித் திகதி - 2022.07.30
6. பயிர் நட்டு முடிப்பதற்கான இறுதித் திகதி - 2022.08.05
7. பகுதி நீர் விநியோகிப்பதற்கான ஆரம்ப திகதி - 2022.07.04
8. நீர் விநியோகிப்பதற்கான இறுதித் திகதி - 2022.11.30
9. கால்வாய் சுத்தப்படுத்தாமைக்கான தண்டப்பணம் 9 அடிக்கு (பம்பய) - ரூபா 2,500.00 (ஒரு நாள் சம்பளம்)

டபிள்யூ. எம். சீ. வீரசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
வெலிமடை.

பிரதேச செயலகம்,
வெலிமடை,
2022, யூன் 27.

7 — 283

---

## 2022 இற்கான சிறுபோக கூட்ட தீர்மானங்களை அறிவித்தல் - தம்பவின்ன திட்டம்

நாட்டில் பரவிக் கொண்டுசெல்லும் கொவிட் - 19 (Covid-19) வைரஸ் தொற்று பரவல் மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு என்பவற்றை கவனத்திற் கொண்டு இம்முறை 2022, சிறுபோக கூட்டம் நடைபெறாததனால் முன்பு நடந்த கூட்டத்தின் தீர்மானம் 2022, சிறுபோக கூட்டத்தின் தீர்மானமாக கொண்டு போகத்தை ஆரம்பிக்க தீர்மானம் எடுக்கப்பட்டது:-

1. நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் உரிய விவசாய அமைப்பின் மூலம் பராமரிப்பு வேலை முடிக்கும் திகதி - 2022.07.12
2. பயிர் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட நிலத்தின் அளவு - 250 ஏக்கர்
3. தீர்மானிக்கப்பட்ட பயிர், பயிர் வகை - கலப்பு மரக்கறி
4. ஆரம்ப நீர் விநியோகித்தல் திகதி - 2022.07.15
5. நிலம் தயார்படுத்தி முடிக்கும் இறுதித் திகதி - 2022.07.30
6. பயிர் நட்டு முடிப்பதற்கான இறுதித் திகதி - 2022.08.05
7. பகுதி நீர் விநியோகிப்பதற்கான ஆரம்ப திகதி - 2022.07.12
8. நீர் விநியோகிப்பதற்கான இறுதித் திகதி - 2022.10.30
9. கால்வாய் சுத்தப்படுத்தாமைக்கான தண்டப்பணம் (நெல் ஒரு ஏக்கருக்கு) - ரூபா 8,000.00

டபிள்யூ. எம். சீ. வீரசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
வெலிமடை.

பிரதேச செயலகம்,
வெலிமடை,
2022, யூன் 20.

7 — 284

---

## யாத்திரைகள் கட்டளைச் சட்டம் (175 ஆம் அத்தியாயம்)

ருஹுணு கதிர்காமம் மகா தேவாலய
ஆடி மகோற்சவம் - 2022

மேற்குறிப்பிட்ட உற்சவம் 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி தொடக்கம் 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதி வரை நடைபெறுமென பொது மக்களுக்கு இத்தால் அறியத் தருகிறேன்.

கீழ்க் குறிப்பிட்டுள்ள அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை களில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள் இக்காலத்தில் நடை முறையில் இருக்கும் என இத்தால் அறியத்தருகின்றேன்:-

1948, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 9859 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி;
1949, யூலை மாதம் 22 ஆந் திகதிய 10000 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி;
1958, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய 11255 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி ;

1961, யூலை மாதம் 07 ஆந் திகதிய 12508 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி ;

1962, மாச்சு மாதம் 02 ஆந் திகதிய 12947 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி.

குணதாஸ சமரசிங்ஹ,
மொனராகலை மாவட்டச் செயலாளர்/
அரசாங்க அதிபர் மற்றும் கதிர்காம
ஆடி மகோற்சவ பாசறைப் பொறுப்பதிகாரி.

மாவட்டச் செயலகம்,
மொனராகலை,
2022, யூன் 30.

**றுஹுணு கதிர்காமம் தேவாலய ஆடி மகோற்சவம் - 2022**

1948, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 9859 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி, 1949, யூலை மாதம் 22 ஆந் திகதி 10000 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி, 1958, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய 11255 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி, 1961, யூலை மாதம் 07 ஆந் திகதிய 12508 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி, 1962, மாச்சு மாதம் 02 ஆந் திகதிய 12947 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி ஆகிய அரசாங்க வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்ட கதிர்காம யாத்திரைப் பற்றிய நிபந்தனைகளின் பேரில் பொதுமக்களின் கவனத்திற்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

1. **பாசறைப் பிரதேசம் என்பது**:

(அ) கதிர்காமம் மாணிக்க கங்கையின் பழைய தரிப்பிடத்தில் இருந்து ஒரு மைல் விஸ்தீரணத் திற்குட்பட்ட பிரதேசம்; மற்றும்

(ஆ) செல்லக் கதிர்காமம் பிள்ளையார் கோவிலில் இருந்து 1/ 4 மைல் விஸ்தீரணத்திற்கு உட்பட்ட பிரதேசமாகும்.

2. **கட்டிடம் அமைத்தல்**.- என்னிடம் அல்லது என்னால் (எழுத்து மூலமாக) அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரின் எழுத்து மூலமான உத்தரவுப் பத்திரம் இன்றி 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி தொடக்கம் 2022 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 12 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குள் எவரேனும் நிரந்தர அல்லது தற்காலிக கட்டிடங்கள் அமைத்தல் கூடாது.

3. **யாசகர்கள்**.- கதிர்காமம் மாணிக்க கங்கையின் இரண்டாவது பாலத்தின் அருகில் அமைக்கப்பட்டிருக்கும் யாசக மண்டபத்தில் அல்லது அதிலிருந்து 4 மீற்றருக்கு உட்பட்ட பிரதேசம் தவிர வேறு எந்தப் பிரதேசத்திலும் யாசிப்பதோ அல்லது யாசகம் கொடுப்பதோ கூடாது.

4. **நீராடுவதும் கழுவுவதும்**.-மாணிக்க கங்கையில் இருந்து கதிர்காமத்திற்கு நீர் விநியோகிக்கும் இடத்தில் அல்லது அதற்கு மேல் அமைந்துள்ள 4.8 கி. மீ. பிரதேசத்திற்குள் நீராடுவது, குளிப்பது அல்லது மிருகங்களைக் குளிப்பாட்டுவது கூடாது.

5. **வாகனங்கள் தரிப்பிடம்** :-

5.1 என்னிடம் அல்லது என்னால் (எழுத்து மூலமாக) அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரின் எழுத்து மூலமான உத்தரவுப்பத்திரம் இன்றி வேறு எவரும் எந்தவிதமான மோட்டார் வாகனமோ, துவிச்சக்கர வண்டியோ, மாட்டுவண்டியோ அல்லது வேறுவிதமான வாகனங்களையோ புனிதப் பிரதேசத்திற்குள் (மாணிக்க கங்கையின் கிழக்குப் பகுதி) செலுத்துதல் அல்லது அனுமதித்தல் கூடாது.

5.2 பாசறைக்கு உரித்தான புதிய நகரத்தின் வாகனங்களுக் கென ஒதுக்கப்பட்டுள்ள வாகன தரிப்பிடத்தைத் தவிர, வேறு எந்த இடத்திலும் வாகனங்களை நிறுத்துதல் கூடாது.

6. **முடி திருத்தும் நிலையம்**.- என்னால் அனுமதி யளிக்கப்பட்ட இடத்தைத் தவிர எவரேனும் வேறு எந்த இடத்திலும் முடி திருத்தும் நிலையங்கள் அமைத்தல் கூடாது.

7. **காவடிக் கடைகள்**.- என்னிடம் அல்லது என்னால் (எழுத்து மூலமாக) அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரின் எழுத்து மூலமான உத்தரவுப் பத்திரமின்றி எவரேனும் எவ்விடத்திலும் காவடிக் கடைகள் அமைத்தல் கூடாது.

8. **வியாபாரம் செய்தல்**:-

8.1 பூசை நடாத்தும் இடம், யாத்திரிகர் ஓய்வு விடுதி அமைந்துள்ள இடம், பேருந்து நிலையம் மற்றும் பயணிகள் செல்லும் 1 ஆம், 2 ஆம் பாலங்களுக்கு பிரவேசிக்கும் இடங்களில் வியாபாரம் செய்தல் கூடாது.

8.2 என்னால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களைத் தவிர வேறு எந்த இடத்திலும் திருநீறு, ஜஸ்பழம், பூசைத்தட்டு, பூசைப்பொருட்கள், தின்பண்டங்கள் உட்பட வேறு எந்தப் பொருட்களையும் விற்பனை செய்தல் கூடாது.

8.3 கிரி விகாரைக்குப் பிரவேசிக்கும் பாதையின் இருமருங்கிலும் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள பூ விற்கும் நிலையங்களில் பூ விற்பனையைத் தவிர வேறு எவராலும் புனித நகருக்குள் கடைகள் அமைத்தல், நடைமுறைப்படுத்துதல், வேறு வியாபாரம் செய்தல் கூடாது.

8.4 அனைத்து கட்டிடங்கள் மற்றும் வியாபார நிலையங்களில் குப்பைத் தொட்டிகள் இருக்கவேண்டிய அதேவேளை குப்பைகள் அதனுள் இடப்படுதல் வேண்டும்.

8.5 விற்பனைக்காக வைத்திருக்கும் தயாரிக்கப்பட்ட அனைத்து உணவுப் பொருட்களையும் ஈக்களிடம் இருந்து பாதுகாக்க மூடியிடப்பட்ட பெட்டிகளில் வைத்திருத்தல் வேண்டும்.

குணதாஸ சமரசிங்ஹ,
மொனராகலை மாவட்டச் செயலாளர்/
அரசாங்க அதிபர் மற்றும் கதிர்காம
ஆடி மகோற்சவ பாசறைப் பொறுப்பதிகாரி.

மாவட்டச் செயலகம்,
மொனராகலை,
2022, யூன் 30.

7-480

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

வாடிக்கையாளரின் பெயர் : ஆரச்சிகே ஜயத் ஜயசிங்க
கிளை : மாத்தறை

2021.04.29 ஆந் திகதியன்று நடைபெற்ற பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீ.எல்.சீ. இன் பணிப்பாளர் சபை கூட்டத்தில் பின்வருமாறு விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 08 ஆம் பிரிவின் நியதிகளின் படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கடப்பாட்டாளராக/ ஈடுவைப்பவராக" ஆராச்சிகே ஜயத் ஜயசிங்க என்பவர், PQ 48 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்ட பேன் ஏஷியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ இன் சார்பில் காலியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கே. எச். எம். எம். கே. காரியவாசம் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.02.23 ஆந் திகதிய 072 ஆம் இலக்க முதனிலை ஈட்டுமுறிமீதும், 2017.12.28 ஆந் திகதிய 183 ஆம் இலக்க இரண்டாந்நிலை ஈட்டுமுறிமீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளாராதலாலும்.

அத்துடன் (இதனகத்துப்பின்னர் சிலவேளைகளில் "வங்கி" எனவழைக்கப்படும்) பேன் ஏஷியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ க்குச் சொல்லப்பட்ட 072 ஆம், 183 ஆம் இலக்க ஈட்டுமுறிகள்மீது கொடுப்பனவு செய்யப்படும் திகதிவரை இப்போது பின்வரும் பணத்தொகைகள் வருமதியாகவும் சேரவேண்டியதாகவும் வந்துள்ளனவாதலாலும்:

(i) (அ) 2022.04.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 2,489,769.15 கொண்ட பணத்தொகைமீது ஆண்டொன்றுக்கு 15.5% வட்டியுடன் 2022.03.31 ஆந் திகதி வரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் இரண்டு மில்லியன் அறுநூற்று எண்பத்திரண்டாயிரத்து நானூற்று நாற்பத்திரெண்டு ரூபா நாற்பத்திரண்டு சதம் (ரூபா 2,682,442.42) கொண்ட பணத்தொகை.

(ஆ) 2022.04.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 663,207.66 கொண்ட பணத்தொகைமீது ஆண்டொன்றுக்கு 8.11% வட்டியுடன் 2022.03.31 ஆந் திகதி வரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் எழுநூற்று இரண்டாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஐந்து ரூபா பதின்மூன்று சதம் (ரூபா 702,395.13) கொண்ட பணத்தொகை.

(இ) 2022.04.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 514,849.91 கொண்ட பணத்தொகைமீது ஆண்டொன்றுக்கு 15.5% வட்டியுடன் 2022.03.31 ஆந் திகதி வரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் ஐநூற்று முப்பத்தெட்டாயிரத்து நூற்றி அறுபத்து மூன்று ரூபா எழுபது சதம் (ரூபா 538,163.70) கொண்ட பணத்தொகை.

(ii) 2022.04.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 300,000.00 கொண்ட பணத்தொகைமீது ஆண்டொன்றுக்கு 20% வட்டியுடன் 2022.03.31 ஆந் திகதி வரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் நானூற்று பதினான்காயிரத்து எழுநூற்று இருபத்தெட்டு ரூபா ஐந்து சதம் (ரூபா 414,728.05) கொண்ட பணத்தொகை.

(iii) 2022.04.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 400,000.00 கொண்ட பணத்தொகைமீது ஆண்டொன்றுக்கு 20% வட்டியுடன் 2022.03.31 ஆந் திகதிவரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் ஐந்நூற்று ஐம்பத்தையாயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்திமூன்று ரூபா எழுபத்தேழு சதம் (ரூபா 555,973.77) கொண்ட பணத்தொகை,

(iv) *2022.04.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 400,000.00 கொண்ட பணத்தொகைமீது ஆண்டொன்றுக்கு 20% வட்டியுடன் 2022.03.31 ஆந் திகதி வரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் ஐந்நூற்று ஐம்பத்தோராயிரத்து எண்ணூற்றிநாற்பத்திரெண்டு ரூபா அறுபத்திமூன்று சதம் (ரூபா 551,842.63) கொண்ட பணத்தொகை.*

(v) *2022.04.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 400,000.00 கொண்ட பணத்தொகைமீது ஆண்டொன்றுக்கு 20% வட்டியுடன் 2022.03.31 ஆந் திகதி வரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் ஐந்நூற்று ஐம்பத்திரெண்டாயிரத்து நூற்றிப்பதினெட்டு ரூபா முப்பத்தேழு சதம் (ரூபா 552,118.37) கொண்ட பணத்தொகை.*

(vi) *2022.04.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 400,000.00 கொண்ட பணத்தொகைமீது ஆண்டொன்றுக்கு 20% வட்டியுடன் 2022.03.31 ஆந் திகதி வரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் ஐந்நூற்று ஐம்பத்தோராயிரத்து எண்ணூற்றிநாற்பத்திரெண்டு ரூபா அறுபத்திரெண்டு சதம் (ரூபா 551,842.62) கொண்ட பணத்தொகை.*

(vii) *2022.04.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 450,000.00 கொண்ட பணத்தொகைமீது ஆண்டொன்றுக்கு 20% வட்டியுடன் 2022.03.31 ஆந் திகதி வரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் அறுநூற்று இருபதாயிரத்து எண்ணூற்றியிருபத்திரெண்டு ரூபா தொண்ணூற்றிநான்கு சதம் (ரூபா 620,822.94) கொண்ட பணத்தொகை.*

(viii) *2022.04.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 400,000.00 கொண்ட பணத்தொகைமீது ஆண்டொன்றுக்கு 20% வட்டியுடன் 2022.03.31 ஆந் திகதி வரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் ஐந்நூற்று ஐம்பத்தாறாயிரத்து ஐந்நூற்றியறுபத்திமூன்று ரூபா தொண்ணூற்றிமூன்று சதம் (ரூபா 556,563.93) கொண்ட பணத்தொகை.*

(ix) *2022.04.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 400,000.00 கொண்ட பணத்தொகைமீது ஆண்டொன்றுக்கு 20% வட்டியுடன் 2022.03.31 ஆந் திகதி வரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் ஐந்நூற்று ஐம்பத்தாறாயிரத்து ஐந்நூற்றியறுபத்திமூன்று ரூபா தொண்ணூற்றிமூன்று சதம் (ரூபா 556,563.93) கொண்ட பணத்தொகை.*

(x) *2022.04.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 500,000.00 கொண்ட பணத்தொகைமீது ஆண்டொன்றுக்கு 20% வட்டியுடன் 2022.03.31 ஆந் திகதி வரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் அறுநூற்று தொண்ணூற்றையாயிரத்து நானூற்றியிருபத்தொன்பது ரூபா எழுபத்தாறு சதம் (ரூபா 695,429.76) கொண்ட பணத்தொகை.*

(xi) *2022.04.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 400,000.00 கொண்ட பணத்தொகைமீது ஆண்டொன்றுக்கு 20% வட்டியுடன் 2022.03.31 ஆந் திகதி வரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் ஐந்நூற்று ஐம்பத்தையாயிரத்து நூற்றி எண்பத்தாறு ரூபா எண்பத்தெட்டு சதம் (ரூபா 555,186.88) கொண்ட பணத்தொகை.*

(xii) *2022.04.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 400,000.00 கொண்ட பணத்தொகைமீது ஆண்டொன்றுக்கு 20% வட்டியுடன் 2022.03.31 ஆந் திகதி வரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் ஐந்நூற்று ஐம்பத்தி மூன்றாயிரத்து இருபத்திரெண்டு ரூபா தொண்ணூற்றிநான்கு சதம் (ரூபா 553,022.94) கொண்ட பணத்தொகை.*

(xiii) *2022.04.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 350,000.00 கொண்ட பணத்தொகைமீது ஆண்டொன்றுக்கு 20% வட்டியுடன் 2022.03.31 ஆந் திகதி வரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் நானூற்று எண்பத்தேழாயிரத்து ஐந்நூற்றியொன்பது ரூபா எண்பத்திமூன்று சதம் (ரூபா 487,509.83) கொண்ட பணத்தொகை.*

(xiv) *2022.04.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 278,380.33 கொண்ட பணத்தொகைமீது ஆண்டொன்றுக்கு 20% வட்டியுடன் 2022.03.31 ஆந் திகதி வரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் இருநூற்று எழுபத்தெட்டாயிரத்து முந்நூற்றியெண்பது ரூபா முப்பத்திமூன்று சதம் (ரூபா 278,380.33) கொண்ட பணத்தொகை.*

(xiv) *2022.04.01 ஆந்திகதியிலிருந்து ரூபா 888,888.88 கொண்ட பணத்தொகைமீது ஆண்டொன்றுக்கு 6% வட்டியுடன் 2022.03.31 ஆந் திகதி வரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் தொள்ளாயிரத்து இருபத்தோராயிரத்து அறுநூற்றியறுபத்தைந்து ரூபா பதின்மூன்று சதம் (ரூபா 921,665.13) கொண்ட பணத்தொகை.*

(xvi) *(அ) 2022.04.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 3,000,000.00 எல்லைவரை ஆண்டொன்றுக்கு 13% வட்டியுடனும் ரூபா 3,000,000.00 விஞ்சுகின்றபோது ஆண்டொன்றுக்கு 28% வட்டியுடனும் 2022.03.31 ஆந் திகதி வரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் மூன்று மில்லியன் ஐந்நூற்று பதினேழாயிரத்து இருநூற்றியிருபத்தொன்பது ரூபா எட்டு சதம் (ரூபா 3,517,229.08) கொண்ட பணத்தொகை, அத்துடன்*

ஆ) *2022.04.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 142,793.04 கொண்ட பணத்தொகைமீது ஆண்டொன்றுக்கு 6% வட்டியுடன் 2022, மாச்சு 31 ஆந் திகதிவரை முதல் மற்றும் வட்டி என்ற கணக்கால் நூற்று நாற்பத்தையாயிரத்து நூற்றியெண்பத்தாறு ரூபா இருபத்தேழு சதம் (ரூபா 145,186.27) கொண்ட பணத்தொகை.*

இத்தால் பின்வருமாறு தீர்மானிக்கப்படுகின்றது :-

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி, கொலன்னாவ, விஹார மாவத்தை, 50/3 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த*

உரிமம்பெற்ற ஏலதாரர் துசித்த கருணாரத்ன என்பவருக்கு, மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை மேற்கூறப்பட்டவாறான வட்டியுடன்சேர்த்து பதினைந்து மில்லியன் நான்கு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து அறுபத்தேழு ரூபா எழுபத்தொரு சதம் (ரூபா 15,437,067.71) கொண்ட மொத்தப் பணத்தொகையையும் சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறவிடப்படற்பாலனவான செலவுத் தொகைகளையும் பணங்களையும் அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் மேலும் விபரமாக விபரிக்கப்பட்டதும் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தின்மூலம் விற்பனைசெய்வதற்கு அதிகார மளிக்கப்பட்டு தத்துவமளிக்கப்படுதல் வேண்டுமென்று;

### மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் மாத்தறையின் நான்கு எல்லைகளில் மாத்தறை மாநகரசபை எல்லைகளிலும் பிரதேச செயலாளர் பிரிவிலும், இல. 08, வெலகொட கிழக்கு கிராம அலுவலர் பிரிவினுள் 7 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும் வெலகொட வீதியில் வெலிவேரிய கிராமத்தில் அமைந்துள்ளதும் அதன்மீதுள்ள மண், கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் வெலிவேரியவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எம். விமலசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1977.09.26 ஆந் திகதிய 1835A ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 1 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளை யுடையது:- வடக்கு: வெலகொட வீதி, (சுனந்த வீதி); கிழக்கு: டப்ளியூ. எம். டீ. ஏடிரியன் அப்புஹாமியினால் உரிமை கோரப்பட்ட காணி (முன்னர் டப்ளியூ. ஜீ. தனேரிஸினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டது); தெற்கு: எலஹேன மற்றும் மேற்கு: அதேகாணியின் காணித்துண்டம் 2; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 1835A ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினான்கு தசம் எட்டுப் பூச்சியம் பேர்ச்சுக்களை (ஏ00. றூ00. பே14.80) கொண்டுள்ளதுடன் மாத்தறைக் காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் A 750/66 இல் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

மேற்கூறப்பட்ட காணி, உரிமம்பெற்ற நிலஅளவையாளர் என். எச். கொடிப்பில்லி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007.05.03 ஆந் திகதிய 549 ஆம் இலக்க வரைபடத்தின் மூலம் மீளநில அளவையிடப்பட்டுள்ளதுடன் மேற்கூறப்பட்டவாறு விவரிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

அருண குருகே,
முகாமையாளர் - அறவீடுகள்.

07-389

### பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

வாடிக்கையாளரின் பெயர் : வேவல்வெல ஹேவகே ரன்ஜன திமுதுரத்ன
கிளை : ராஜகிரிய

2022.04.26 ஆம் திகதியன்று நடைபெற்ற பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீ.எல்.சீ. இன் பணிப்பாளர் சபை கூட்டத்தில் 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 08 ஆம் பிரிவின் கீழ் பின்வருமாறு விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது :

"கடப்பாட்டாளராக/ ஈடுவைப்பவராக" வேவல்வெல ஹேவகே ரன்ஜன் திமுதுரத்ன என்பவர், PQ 48 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்ட பேன் ஏஷியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ இன் சார்பில் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆர். ஆர். எல். சீ. ரணசிங்ஹ என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2018.08.23 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டுமுறி இல. 1458 மற்றும் 2019.03.01 ஆந் திகதிய இரண்டாம் நிலை ஈட்டுமுறி இல. 1551 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர் ஆதலால்;

பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ (இதனகத்துப் பின்னர் சில வேளைகளில் "வங்கி" என அழைக்கப்படும்) இற்கு வரவேண்டியும் சேரவேண்டியும் உள்ளது.

அ.2022.03.31 ஆந் திகதி வரையான ரூபா 4,412,424.48 எனும் ஆரம்ப பணத்தொகையானது 19% வருடாந்த வட்டியுடன் சேர்த்து 2022.04.01 ஆந் திகதிக்கு நான்கு மில்லியன் எழுநூற்று இருபத்தைந்தாயிரத்து நூற்று எழுபத்து எட்டு ரூபா முப்பத்து இரண்டு சதம் (ரூபா 4,725,178.32) ஆகவும், மற்றும் 2022.03.31 ஆந் திகதி வரையான ரூபா 359,599.64 எனும் ஆரம்ப பணத்தொகையானது 19% வருடாந்த வட்டியுடன் சேர்த்து 2022.04.01 ஆந் திகதிக்கு முந்நூற்று எண்பதாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து நான்கு ரூபா முப்பத்தெட்டு சதம் (ரூபா 380,944.38) ஆகவும்,

ஆ.2022.03.31 ஆந் திகதி வரையான ரூபா 4,834,048.48 எனும் ஆரம்ப பணத்தொகையானது 17.5% வருடாந்த வட்டியுடன் சேர்த்து 2022.04.01 ஆந் திகதிக்கு ஐந்து மில்லியன் இருநூற்று ஐம்பத்தைந்தாயிரத்து இருநூற்று முப்பது ரூபா பதின்மூன்று சதம் (ரூபா 5,255,230.13) ஆகவும், மற்றும் 2022.03.31 ஆந் திகதி வரையான ரூபா 380,685.70 எனும் ஆரம்ப பணத்தொகையானது

17.5% வருடாந்த வட்டியுடன் சேர்த்து 2022.04.01 ஆந் திகதிக்கு நானூற்று ஒன்பதாயிரத்து நூற்று ஒன்பது ரூபா ஐம்பத்தைந்து சதம் (ரூபா 409,109.55) ஆகவும் சொல்லப்பட்ட 1458 மற்றும் 1551 ஆம் இலக்க ஈட்டுமுறிகளுக்கான பணத்தை செலுத்தி முடிக்கும் வரை வரவேண்டியும், சேரவேண்டியும் உள்ளது.

இதன் மூலம் தீர்மானிக்கப்படுவதாவது :-

மேற்சொல்லப்பட்ட பணத்தொகை பத்து மில்லியன் எழுநூற்று எழுபதாயிரத்து நானூற்று அறுபத்து இரண்டு ரூபா முப்பத்தெட்டு சதம் (ரூபா 10,770,462.38) ஐ 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய பணங்கள், செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனை திகதிவரையான வட்டியுடனும் சேர்த்து எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள லெல்வல குரு கமகே புத்திக்க பிரசாதினி என்பவரினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஈட்டுமுறி இலக்கங்கள் 1458 மற்றும் 1551 ஆகியவற்றின் ஆதனத்தை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொலன்னாவை, விஹார மாவத்தை, இல. 182/ 3, (50/ 3) ஐச் சேர்ந்த உரிமம் பெற்ற ஏலதாரர் துசித் கருணாரத்ன என்பவருக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கின்றதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**மேற்கூறப்பட்ட ஆதனத்தின் அட்டவணை**

மேல் மாகாணம், (ஹோமாகம பதிவு பிரிவிற்குள்) கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளை, பல்லே பத்து, ஹோமாகம பிரதேச செயலக பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, கலவிலவத்த வடக்கு, இல. 486 C கிராம உத்தியோகத்தர் பிரிவு, ஹோமாகம கிராமத்தில் அமைந்துள்ள சமன் மாவத்தை, வரிப்பண இல. 9/ 24 இல் கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கிய "கலவில எஸ்டேட் (பகுதி)" எனும் காணி (உரிமம் பெற்ற நில அளவையாளர் எம். ஜே. சேதுங்க அவர்களினால் தயாரிக்கப்பட்ட 28, 29, யூன் மற்றும் 08 யூலை, 1971 ஆம் திகதிய வரைபட இல. 899 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 3 இன் உப பிரிவாகும்) உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். வீ. ஏ. என். சமந்தி அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2016, மே 17 ஆந் திகதிய வரைபட இல. 1189A இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 01 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு 01 இன் எல்லைகளாவன : வடக்கு: ஓடை; கிழக்கு: காணித்துண்டுகள் 2 மற்றும் 5; தெற்கு: மேற் சொல்லப்பட்ட வரைபட இல. 899 இன் காணித்துண்டு R2 (பாதை) மற்றும் மேற்கு: மேற் சொல்லப்பட்ட வரைபட இல. 899 இன் காணித்துண்டு 2 மற்றும் இக்காணியானது மேல் குறிப்பிடப்பட்டுள்ள வரைபட இல. 1189 A இற்கு அமைய எட்டு பேர்ச் (ஏ00. றூ00. பே08) விஸ்தீரணத்தை கொண்டுள்ளதுடன், இக்காணியானது ஹோமாகம காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் A 703/97 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இக்காணியானது ஹோமாகம காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் G 726/ 200 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், உரிமம் பெற்ற நில அளவையாளர் எம். ஜே. சேதுங்க அவர்களினால் தயாரிக்கப்பட்ட 28, 29, யூன் மற்றும் 08 யூலை, 1971 ஆம் திகதிய வரைபட இல. 899 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு R2 (பாதை ஒதுக்கீடு) பாதைக்கு மேலாகவும், கீழாகவும் மற்றும் ஊடாகவும் செல்லும் பாதை உரிமையைக் கொண்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

தேவிகா ஹல்வத்துர,
முகாமையாளர் - அறவீடுகள்.

07-390

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.